அது தரமான அரிசிதானா என்பதே கேள்விக்குறியாக இருக்கிறது. இந்தப் பிரச்னையை அரசாங்கம் சரியாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கேள்விக்குறிக்கு பதிலாகத்தான் இந்த அரிசி ஆலைகளை அரசே எடுத்துக்கொள்ள ஆய்வு செய்து வருகிறது என்று சொன்னேன்.

திரு. சோ. அழகர்சாமி : நெல்லையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நவீன அரிசி ஆலை சில நாட்கள் செயல்பட்டதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அது எந்த ஆண்டு செயல்பட்டது? ஆரம்பித்த காலத்திலிருந்து மொத்தம் எத்தனை டன் அரிசி அரைக்கப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : எத்தனை டன் அரிசி அரைக்கப்பட்டது என்பதை அறிந்து கொள்ளவேண்டுமானால் தனிக்கேள்வி போடுவதாக இருந்தால் பதில் சொல்ல முடியும். அரிசி ஆலை ஓடவே இல்லை என்று சொன்னது தவறு. அரிசி ஆலை ஓடியதை நானே பார்த்து இருக்கிறேன்.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, அல்லித்துறையில் கட்டப்பட்டு இருக்கும் நவீன ஆலை சில நேரங்களில் ஓடியதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். எனக்குத் தெரிந்தவரையில் அது ஒரு நாள் கூட ஓடவே இல்லை. அங்கே இருக்கும் பணியாளர்கள் நிரந்தரமாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். வாச்மேன் இருக்கிறார், டெம்பரரியாக அல்ல, பர்மனென்ட்டாக வைத்து இருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக அரசு அதை ஏற்று நடத்துவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இதுபோன்று இருக்கிற நவீன அரிசி ஆலைகளில் அரசாங்கமும் முதல் போட்டு இருக்கிற காரணத்தால், அந்த ஆலைகளை இயங்கவைக்க வேண்டுமென்ற முடிவு எடுத்து, அந்த ஆலைகளை உணவுத்துறையில் எடுத்துக் கொண்டு இயங்கச் செய்வது என்பதற்கான ஒரு செயற்குறிப்பு இருக்கிறது. இந்த ஆலைகளில் அரசாங்கம் ப்ரோகியூர் செய்து வைத்து இருக்கும் நெல்லை அரைத்து, அதை மக்களுக்கு அளிக்க முடியுமா என்பதையும் அரசு பரிசீலித்து வருகிறது. இனிமேல் ஓடாமல் இருக்கும் எல்லா அரிசி ஆலைகளையும் ஓடச்செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்யும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Storage plants for potatoes

* 102 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to set up potato storage plants in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: 1,000 டன் கொள்ளளவு கொண்ட இரண்டு குளிர் பதன சாதனங்களை ஊட்டியிலுள்ள விஜய நகரம் பண்ணையில் ஒன்றும் மற்றொன்று சென்னையிலும் நிறுவுவதற்கு அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, potatoes are grown in large quantities in the Hosur taluk, next to the Nilgiris. The quality and taste of the potato is very fine and some good potato cultivators there have won prizes. As it is a delicate crop a cold storage plant is absolutely necessary. May I know whether a cold storage plant will be sanctioned for Hosur taluk?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, தற்சமயம் இல்லை.

திரு. எம். தேவராசன்: தலைவர் அவர்களே, ஊட்டியில் கட்ட விருக்கும் அந்த வேலை எப்பொழுது முடிவடையும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: சமீபத்திலே அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது; விரைவில் வேலை துவங்கும், முடிக்கப் படும்.

Ennore Thermal Power Station

*103 Q.—THIRU R. R. MUNUSAMI: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether a large quantity of control, production metering and H. V. Bus duct equipments have been purchased for the Ennore Thermal Power Station during 1970-71-72; and

(b) the cost at which they were purchased?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) இல்லை.

(இ) வினு எழவில்லை.

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவர் அவர்களே, 1970, 71, 72-ம் ஆண்டுகளில் மீட்டர் வழங்கவில்லை என்றால், எப்படி அவை இயங்குகின்றன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அப்பொழுது வரவழைக்கப் படவில்லை. புதிதாக வழங்க ஒப்பந்தம் கோரப்பட்டிருக்கிறது.

Death of electricity worker at Cumbum

*104 Q.—THIRU K. T. K. THANGAMANI: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether an electricity worker died on 24th July 1971 at Cumbum in Madurai District while on duty due to electric shock;

(b) if so, the amount of compensation paid to his family; and

(c) the steps taken to prevent recurrence of such accidents?